**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

**மதுரை மாநகராட்சி**

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2010ம் ஆண்டு ஜூன் திங்கள் 29 -ம் நாள் செவ்வாய் கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் :** ***"ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்***
***பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து "***

**பொருள் :** தமக்கு தீங்கிழைத்தாரை எதிர்நின்று தண்டித்தாரை ஒரு பொருளாக மதித்து மனத்தில் வைக்க மாட்டார்கள், ஆனால் பொறுத்தாரைப் பொன்னைப் பொதிந்து வைத்துக் காப்பாற்றுவது போலத் தம்மனத்தில் வைத்து என்றும் நினைத்துப் போற்றுவர்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**<u>1) பி11/11634/2010</u>**

மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01-01-2010 முதல் (Dearness allowance) அகவிலைப்படி 27 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக Basic Pension ல் 8 சதவீதம் உயர்த்தப்பட்டு அரசாணை எண்.109 நாள் 05.04.2010ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு:</u>**

ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஷை தொகை வழங்க கூடுதல் செலவு சுமார் ரூ.12,00,000 ஆகும்.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.903</u>**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) பி11/00041/09**

மதுரை மாநகராட்சி 2008-2009ம் ஆண்டிற்கு பொங்கல் போனஸ் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.500/- என வழங்க அரசாணை எண்.G.O.No.2/ நாள்: 02.01.2010ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு:**

2008-2009ம் ஆண்டில் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்க கூடுதல் செலவு சுமார் ரூ.19 இலட்சம் ஆகும்.

**மாமன்ற தீர்மானம் எண்.904**
**பதிவு செய்யப்பட்டது.**

**3) B1/39373/2008**

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏற்கனவே 01.07.2009 முதல் வழங்கப்பட்டு வந்த 27% அகவிலைப்படியை 01.01.2010 முதல் 35% சதவீதமாக உயர்த்தி வழங்க வெளியிடப்பட்டுள்ள நிதி (படிகள்) துறையின் 96 எண்ணுள்ள 27.03.2010 தேதிய அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

1. மேற்படி அகவிலைப்படி உயர்ந்த தொகை 01.01.2010 முதல் ரொக்கமாக வழங்கப்படும்.
2. மேற்படி அகவிலைப்படி உயர்வினால் மாநகராட்சிக்கு மாதத்திற்கு ரூ.1,00,00,000/- கூடுதலாக செலவாகும்.

**மாமன்ற தீர்மானம் எண்.905**
**பதிவு செய்யப்பட்டது.**

**4) B1/16401/2009**

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 6 வது ஊதியக்குழு நிலுவைத் தொகையை மூன்று தவணைகளாக வழங்க ஏற்கனவே அரசாணை எண்.234 நாள்:01.06.2009–ல் உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது நிதித்துறை (படிகள்) கடிதம் எண்.16464/2010/1 நாள்:27.03.2010 ன்படி 2 வது தவணைத் தொகையை 01.04.2010க்கு பிறகு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

1. மாநகராட்சி பணியாளர்களுக்கு 2 வது தவணைத் தொகை வழங்க உத்தேசமாக ரூ.$5^{1/2}$ கோடி செலவாகும்.

**மாமன்ற தீர்மானம் எண். 906**
**பதிவு செய்யப்பட்டது.**

**5) H1/33444/08**

அரசு ஆணை எண்.236, நிதி படிகள் நாள்:01.06.09ல் மருத்துப் பணியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு மேல்சட்டைப்படியாக (Over Coat Allowance) ஒரு ஆண்டிற்கு ரூ530/- வீதம் வழங்கலாம் எனவும் இதர ஈட்டுப்படியாக (Other Compensatory Allowance) ஒரு மாதத்திற்கு ரூ.500/- வீதம் வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனவே மேற்கண்ட அரசாணையின்படி, நமது மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு 1.06.09 முதல் மேல் சட்டைப்படி ஒரு ஆண்டிற்கு ரூ.530/- மற்றும் இதர ஈட்டுப்படி ஒரு மாதத்திற்கு ரூ.500/-ம் வழங்குவதற்கு மாமன்ற கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.907**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) B30/01008/09**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் இணைப்புகள் இல்லாத பகுதிகளுக்கு தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு 6 லாரிகள் ஒப்பந்த அடிப்படை முறையில் 01.07.09 முதல் 28.02.10 வரை குடிநீர் சப்ளை செய்ய M/s.ஜெய்வர்சினி டிரான்ஸ்போர்ட், நுங்கம்பாக்கம், சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு காலம் 28.02.10 உடன் முடிவடையும் காரணத்தினால் மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.03.10 முதல் 28.02.2011 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் விலை விகிதத்தின் அடிப்படையிலும் பணியினை மேற்கொள்ள சப்ளை உத்தரவு வழங்குவதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு, சப்ளை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சப்ளை உத்தரவு வழங்கியமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.908**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ந.பொ.1/23738/08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 18 இடங்களில் Vambay நிதியுதவி திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறைகள் கட்டுவதற்கு கடந்த 28.05.08ல் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. தீர்மானம் எண்.405 & 410, நாள்:28.05.08 இவற்றில் நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதங்களின் பேரில் (கடிதம் எண். 13626/07/**IHSDP** 3, நாள்.29.10.09 & 18.01.10) கீழ்க்கண்ட **11** இடங்களில் மேற்கண்ட நிதியுதவியின் கீழ் கழிப்பறைகள் அமைத்துக் கொள்வதற்கு முதற்கட்டமாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

1) வார்டு எண்.64, கோவலன் நகர்
2) வார்டு எண்.65, முத்துப்பட்டி
3) வார்டு எண்.56, ராம் தியேட்டர் அருகில் I
4) வார்டு எண்.56, ராம் தியேட்டர் அருகில் II
5) வார்டு எண்.48, நாகூர் தோப்பு (மீன் மார்கெட் அருகில் )
6) வார்டு எண்.10, வைகை வடகரை (பாண்டு ரெங்கன் காம்பவுண்டு அருகில்)
7) வார்டு எண்.10, புளியந்தோப்பு அருகில்
8) வார்டு எண்.33, மக்கான் தோப்பு
9) வார்டு எண்.42, காளவாசல் I
10) வார்டு எண்.42, காளவாசல் II
11) வார்டு எண்.5, தொழிற்பயிற்சிபள்ளி அருகில் (ITI Near)

மேற்கண்ட சுகாதார வளாகங்கள் அமைக்க ஒவ்வொரு வளாகத்திற்கும் ரூ.4.00 இலட்சம் வீதம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவற்றில் வரிசை எண்.1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு, வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநரக கடிதங்களின் பேரில் ஒவ்வொரு சுகாதார வளாகத்திற்கும் ரூ.2.00 இலட்சம் மானியமாகவும் மீதமுள்ள ரூ.2.00 இலட்சம் மாநகராட்சி வருவாய் நிதி ஆதாரத்தின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.909**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) ம.பொ.4/38954/06**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் பொதுமக்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய சுகாதாரமான கழிப்பறை கட்டிடங்களை கட்டி இயக்கி மீண்டும் மாநகராட்சியிடம் திரும்ப ஒப்படைப்பு செய்யும் (DBOOT) முறையின் கீழ் கழிப்பிடங்கள் அமைக்க தனியார் நிறுவனங்களிடம் விருப்பம் கோரி கடிதம் வைக்கப்பட்டது. இதற்கென கடந்த 16.07.09ம் தேதியன்று நடைபெற்று மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. (மாமன்ற தீர்மானம் எண்.737, நாள்:16.07.09) இதன் பேரில் கீழ்க்கண்ட இடங்களில் கீழ்க்கண்ட நிறுவனத்தினர் உரிய நிபந்தனைகளின் அடிப்படையில் கழிப்பறைகள் அமைத்து தற்போது பராமரிப்பு மேற்கொண்டும் வருகின்றது. பொதுமக்கள் இலவசமாக நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார வளாகங்களை பயன்படுத்தி வருவதால் இதன் மூலம் மாநகராட்சிக்கு நற்பெயர் கிடைத்துள்ளது. இதுவரை அமைக்கப்பட்டுள்ள கழிப்பிடங்கள் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | வார்டு எண். | கழிப்பறை அமைந்துள்ள இடம் | நிறுவனங்களின் விபரம் |
|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* |
| 1 | 68 | பைபாஸ் சாலை @ நடராஜ் தியேட்டர் அருகில் | M/s. போத்தீஸ் |
| 2 | 6 | மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் (வடக்கு) | M/s.P.R.P.நிறுவனத்தார் |
| 3 | 6 | மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் (தெற்கு) | M/s.வேலம்மாள் கல்வி அறக்கட்டளை |
| 7 | 42 | ஜெய்ஹிந்த்புரம் மார்க்கெட் அருகில் | M/s.R.R Construction நிறுவனத்தார் |
| 8 | 71 | பைபாஸ் சாலை @ குரு தியேட்டர் அருகில் | M/s.மீனாட்சி மில், பரவை |
| 9 | 16 | பாலம் ஸ்டேசன் ரோடு @ குமரன் சாலை சந்திப்பு | M/s.சேம்பர் ஆப் காமர்ஸ் |
| 10 | 25 | ஆரப்பாளைம் OHT (வைகை காலனி அருகில்) | M/s.TVS நிறுவனத்தினர் |
| 11 | 6 | மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்துநிலையம் அருகில் லாரி நிறுத்துமிடம் | M/s.கெவின்கேர் பிரைவேட் லிமிடெட் |
| 12 | 46 | மஹால் பூங்கா வளாகம் | M/s.TVS நிறுவனத்தினர் |
| 13 | 10 | பனகல் சாலை இராஜாஜி அரசு மருத்துவமனை அவசர வழி எதிர் கால்வாய் | M/s.கெவின்கேர் பிரைவேட் லிமிடெட் |

மேற்கண்ட கழிப்பறைகளின் தண்ணீர் மற்றும் மின் விளக்குகளுக்கான மின்சார துய்ப்பு கட்டணத்தை அந்தந்த மண்டலங்கள் மூலம் மாநகராட்சி வருவாய் நிதி ஆதாரத்தின் கீழ் செலுத்திக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.910</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**<u>9) மதி1/26560/2010</u>**

மதுரை தெற்கு வட்டம் வடக்கு மதுரை கிராமத்தில் புல எண்108 மற்றும் 109 ஆகியவற்றில் முறையே 178ச.மீ மற்றும் 153 ச.மீ நிலத்தினை செல்லூர் பி.சி.சி. சாலை மேம்பாலம் அருகே வட்ட வடிவ இணைப்புச் சந்தி மற்றும் அணுகுபாதை அமைக்க நெடுஞ்சாலை துறைக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக மேற்படி புலங்கள் மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டதில் **"புல எண் 109 மதுரை மாநகராட்சி பாதை"** என்று உள்ளதால் மேற்படி நிலத்தினை நெடுஞ்சாலைத்துறைக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக ஒப்புதலை அளிக்கும்படி கோரப்பட்டுள்ள மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்25505/2007/ஒய்2/, நாள் :08.09.2009 வாசிக்கப்பட்டு

இடம் ஆய்வு செய்யப்பட்டதில் இந்த இடம் சர்வே ஆவணங்களின்படி மாநகரட்சிக்கு சொந்தமான இடமாகும். தற்போது காலியிடமாக உள்ளது. சர்வே வார்டு எண் X, பிளாக் எண் 110, நகர புல எண் 109ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான 158ச.மீ பரப்பளவுள்ள இடத்தை நெடுஞ்சாலைத்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குனரின் ஒப்புதலைப் பெற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.911</u>**
**நெடுஞ்சாலைத்துறைக்கு நில மாற்றம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஒப்புதலை பெற குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10)H3/10196/07**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலங்களுக்கு 60 நபர்களை வேலை வாய்ப்புத்துறையின் மூலம், தினக்கூலிகளாக 60 நபர்கள் எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர், தற்சமயம் பணிக்காலம் 21.04.2010ல் முடிவடைந்து விட்டது. பொது மக்கள் நலன் கருதியும், மீண்டும் பணியினை பணியாளர்கள் மூலம் தொடரவும் 23.04.2010 முதல் 89 நாட்களுக்கு பணியினை நீட்டிப்பு செய்து வழங்குமாறும் மாமன்ற கூட்டத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.912**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) ம.பொ. 5 / ம.எண்.912 / 09 -10**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட வெள்ளைக்கல் குப்பை மையத்தில் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட பழங்கால நிர்வாக கட்டிடத்தினை புனரமைப்பு செய்து உபயோகத்திற்கு கொண்டு வருவதற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிரப்புதல் திட்டம் 2009-10 நிதியின் கீழ் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது (ந.க.எண். 39618/09/LA 3, நாள்.24.11.09 = ரூ. 202.00 இலட்சம்). இப்பணிகளுக்கென உரிய நிர்வாக ஒப்புதல் கடந்த 27.11.09ல் நடத்தப்பட்ட மாமன்றக் கூட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது (மாமன்ற தீர்மானம் எண். 827, நாள். 27.11.09). மேற்கண்ட ஒப்புதலின் பேரில், உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கடந்த 26.04.10ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில், கீழ்க்கண்ட ஒப்பந்தக்காரர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தனர். அதன் விபரம் வருமாறு :

1) M/s. Yogaa & Co., நிறுவனம் - 1.91% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.
2) M/s. Mak Construction நிறுவனம் - 2.87% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், L 1 ஒப்பந்தக்காரர் M/s.Yogaa & Co., நிறுவனத்தினர் இவ்வலுவலக வேண்டுகோளினை ஏற்று, 2009-10ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக மேற்கண்ட பணியினை செய்து தருவதற்கு சம்மதக் கடிதம் கொடுத்துள்ளனர். மேற்கண்ட சம்மதக் கடிதத்தினை ஏற்று, அரசின் நிதியுதவி பெறப்பட்ட பணி என்பதாலும், உடனடியாக முன்னேற்ற அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்பதாலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்.913**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) ம.பொ. 5 / ம.எண். 833 / 09 -10**

மதுரை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 48 கக்கன் காலனி (சங்கிலி தோப்பு) மற்றும் வார்டு எண். 58 மூலக்கரை ஆகிய பகுதிகளில் மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கென குடியிருப்பு கட்டிடம் மற்றும் இதர வசதிகள் செய்வது தருவதற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு அபிவிருத்தி நிரப்புதல் திட்டம் 2009-10 நிதியின் கீழ் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது (ந.க.எண். 39618/09/LA 3, நாள். 24.11.09 = ரூ. 525.00 இலட்சம்). இப்பணிகளுக்கென உரிய நிர்வாக ஒப்புதல் கடந்த 27.11.09ல் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது (மாமன்ற தீர்மானம் எண். 827, நாள். 27.11.09). மேற்கண்ட ஒப்புதலின் பேரில், உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கடந்த 26.04.10ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில், கீழ்க்கண்ட ஒப்பந்தக்காரர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தனர். அதன் விபரம் வருமாறு :

1. M/s. S.R.M. Enterprises நிறுவனம் - 4.99% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.
2. திரு.K.R. கண்ணன் - 6.50% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், L 1 ஒப்பந்தக்காரர் M/s. S.R.M. Enterprises நிறுவனத்தினர் இவ்வலுவலக வேண்டுகோளினை ஏற்று, 2009-10ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவாக மேற்கண்ட பணியினை செய்து தருவதற்கு சம்மதக் கடிதம் கொடுத்துள்ளனர். மேற்கண்ட சம்மதக் கடிதத்தினை ஏற்று, அரசின் நிதியுதவி பெறப்பட்ட பணி என்பதாலும், உடனடியாக முன்னேற்ற அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்பதாலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .914**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13) ம.பொ. 5/ ம.எண். 910 B / 09 -10**

மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தத்தனேரி மயானத்தினை சீர் செய்யும் பொருட்டு கட்டிட மராமத்து பணிகள் மற்றும் மின் உபகரணங்கள் பொருத்தி மேம்படுத்திட இயக்குதல் மற்றும் பராமரிப்பு அபிவிருத்தி நிரப்புதல் திட்டம் 2009-10 நிதியின் கீழ் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது (ந.க.எண். 39618/09/LA 3, நாள். 24.11.09 = ரூ. 525.00 இலட்சம்). இப்பணிகளுக்கென உரிய நிர்வாக ஒப்புதல் கடந்த 27.11.09ல் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது (மாமன்ற தீர்மானம் எண். 827, நாள். 27.11.09). மேற்கண்ட ஒப்புதலின் பேரில், உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கடந்த 26.04.10ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில், கீழ்க்கண்ட ஒப்பந்தக்காரர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தனர். அதன் விபரம் வருமாறு :

1. திரு.K.D. ராம்குமார் - 2.53% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
2. M/s. Balaji Construction நிறுவனம் - 2.46% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
3. M/s. Jawalla Equipments and Consultants நிறுவனம் - 0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
4. M/s. The Madurai Multipurpose and Industrial Units நிறுவனம் - 0.09% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.
5. திரு.M.M. கார்த்திகேயன் - 4.92% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், L 1 ஒப்பந்தக்காரர் திரு.K.D. ராம்குமார் அவர்களின் மேற்கண்ட விலை விகித்தினை ஏற்று, அரசின் நிதியுதவி பெறப்பட்ட பணி என்பதாலும், உடனடியாக முன்னேற்ற அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்பதாலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.915</u>**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14) ம.பொ. 5 / ம.எண். 840 / 09 -10**

மதுரை மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பெரியார் பேருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பொருட்டு சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால், மேற்கூரை மற்றும் புல்வெளி அமைத்து மேம்படுத்துவதற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு அபிவிருத்தி நிரப்புதல் திட்டம் 2009-10 நிதியின் கீழ் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ள (ந.க.எண். 39618/09/LA 3, நாள். 24.11.09 = ரூ. 525.00 இலட்சம்). இப்பணிகளுக்கென உரிய நிர்வாக ஒப்புதல் கடந்த 27.11.09ல் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது (மாமன்ற தீர்மானம் எண். 827, நாள். 27.11.09). மேற்கண்ட ஒப்புதலின் பேரில், உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கடந்த 26.04.10ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில், கீழ்க்கண்ட ஒப்பந்தக்காரர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தனர். அதன் விபரம் வருமாறு :

1) M/s. Yogaa & Co., நிறுவனம் - 4.96% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.
2) M/s. Mak Construction நிறுவனம் - 7.95% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், L 1 ஒப்பந்தக்காரர் M/s. Yogaa & Co., நிறுவனம் மேற்கண்ட விலை விகித்தினை ஏற்று, அரசின் நிதியுதவி பெறப்பட்ட பணி என்பதாலும், உடனடியாக முன்னேற்ற அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்பதாலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.916</u>**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15) ம.பொ. 5 / ம.எண். 910 A/ 09 -10**

மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தத்தனேரி மயானத்தினை சீர் செய்யும் பொருட்டு புகைக்கூடு பொருத்தி மேம்படுத்துவதற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு அபிவிருத்தி நிரப்புதல் திட்டம் 2009-10 நிதியின் கீழ் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது (ந.க.எண். 39618/09/LA 3, நாள். 24.11.09). இப்பணிகளுக்கென உரிய நிர்வாக ஒப்புதல் மாமன்றக் கூட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது (மாமன்ற தீர்மானம் எண். 827, நாள். 27.11.09). மேற்கண்ட ஒப்புதலின் பேரில், உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கடந்த 26.04.10ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில், கீழ்க்கண்ட ஒப்பந்தக்காரர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தனர். அதன் விபரம் வருமாறு :

1) திரு.M.M. கார்த்திகேயன் - 3.23% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்.
2) திரு.K.D. ராம்குமார் - 2.05% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.

3) M/s. Balaji Construction நிறுவனம் - 1.77% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
4) M/s. Jawalla Equipments and Consultants நிறுவனம் - 0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
5) M/s. The Madurai Multipurpose and Industrial Units நிறுவனம் - மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம்.
6) M/s. The Essco Furnace (P) Ltd., நிறுவனம் - மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 95.37% அதிகம்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், L 1 ஒப்பந்தக்காரர் திரு.M.M.கார்த்திகேயன் அவர்களின் மேற்கண்ட விலை விகித்தினை ஏற்று, அரசின் நிதியுதவி பெறப்பட்ட பணி என்பதாலும், உடனடியாக முன்னேற்ற அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்பதாலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.917</u>**
**<u>பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**<u>16) ம.பொ. 5 / ம.எண். 909 / 09 -10</u>**

மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தத்தனேரி மயானத்தினை சீர் செய்யும் பொருட்டு சுற்றுச் சுவர், கழிப்பறை, பாதுகாவலர் அறை, ரிச்சுவல் உறால், சிராத் மண்டபம், சிமெண்ட் சாலை மற்றும் நடைபாதை அமைத்து மேம்படுத்துவதற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு அபிவிருத்தி நிரப்புதல் திட்டம் 2009-10 நிதியின் கீழ் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது (ந.க.எண். 39618/09/LA 3, நாள். 24.11.09 = ரூ. 525.00 இலட்சம்). இப்பணிகளுக்கென உரிய நிர்வாக ஒப்புதல் கடந்த 27.11.09ல் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது (மாமன்ற தீர்மானம் எண். 827, நாள். 27.11.09). மேற்கண்ட ஒப்புதலின் பேரில், உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கடந்த 26.04.10ல் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில், கீழ்க்கண்ட ஒப்பந்தக்காரர்கள் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தனர். அதன் விபரம் வருமாறு :

1) திரு. ஸ்ரீ உறரி - 3.53% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.
2) திரு.K.R. கண்ணன் - 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், L 1 ஒப்பந்தக்காரர் திரு.ஸ்ரீ உறரி அவர்களின் மேற்கண்ட விலை விகித்தினை ஏற்று, அரசின் நிதியுதவி பெறப்பட்ட பணி என்பதாலும், உடனடியாக முன்னேற்ற அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்பதாலும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்..918</u>**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மதுரை** **மேயர்**
**நாள் : .06.2010** **மதுரை மாநகராட்சி**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2010ம் ஆண்டு ஜீன் திங்கள் 29-ம் நாள் செவ்வாய்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1)Jn.S. 2/07628/09**

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சகத்தின் திட்ட வழிகாட்டி நெறிமுறையின் படி பத்து இலட்சம் மக்கள் தொகைக்கு 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின் கீழ் நகரத்திலுள்ள குடிசைப்பகுதி கணக்கெடுப்பிற்கு மாநகராட்சி வாரியாக ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மதுரை மாநகராட்சிக்கென ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண். ந.க.எண். 49585/09/IHSDP, நாள். 20.04.10ன் படி மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட குடிசைப் பகுதிகளில் சமூக - பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் பற்றிய கணக்கெடுப்பு செய்து உடன் அறிக்கை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தின் அடிப்படையில் ஏற்கனவே மதுரை மாநகராட்சியில் தேர்வு செய்யப்பட்டுள்ள குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் பற்றிய விரிவான அறிக்கை தயார் செய்யவும், தயார் செய்யப்பட்ட அறிக்கையினை அரசின் உரிய ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவும், இதற்கென ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்தினை தற்போது அவசியத்தினை முன்னிட்டு மாநகராட்சி வருவாய் நிதி ஆதாரத்தின் கீழ் மேற்கொண்டு, உரிய ஒப்புதல் பெறப்பட்டு தொகை அரசிடமிருந்து வரப் பெற்றவுடன் செலவீனத் தொகையினை ஈடு செய்து கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 919**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2)ம.பொ. 4/ 00525/ 10**

மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண். 8, அண்ணாநகர் மேற்கு LIG காலனியில் அன்னை வேளாங்கண்ணி ஆலயம் எதிர்புறம் அமைந்துள்ள பூங்கா தற்போது பராமரிப்பின்றி சிதிலமடைந்துள்ளது. மேற்கண்ட பூங்காவினை சிறப்பான முறையில் பராமரித்து பொழுதுபோக்கு உபகரணங்கள் நிறுவி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு அண்ணாநகரில் அமைந்துள்ள வாசன் கண் மருத்துவமனை நிறுவனம் தனது சொந்த செலவில் பூங்காவினை அமைத்து பராமரிக்க விருப்பம் தெரிவித்து கடிதம் வரப்பட்டுள்ளது. மேற்கண்ட பூங்காவினை மராமத்து செய்ய இம்மாநகராட்சியால் ரூ. 17.20 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டில் பூங்காவின் உட்புறம் நடைபாதை மேடை, அலங்கார பூச்செடிகள், விளையாட்டு சாதனங்கள் மற்றும் இரும்பு கம்பிவேலி அமைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பூங்காவினை பராமரிப்பதற்கு மாநகராட்சியில் தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததாலும் மாநகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டும் பூங்காவினை உபயதாரர் அடிப்படையில் வாசன் கண் மருத்துவமனையினர் பராமரித்துக் கொள்வதற்கு நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்..920**

**நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்க குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) ம.வ.2/ 3187/2009**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாரதியார் வணிக வளாகம் மற்றும் பிற இடங்களில் உள்ள சில கடைகள், 2000-2001 முதல் பூட்டிய நிலையில் உள்ள 80 கடைகளுக்கு வாடகைத் தொகை செலுத்தப்படாமல் இருந்ததால், கடைகளை பூட்டி பொறுப்பு எடுக்கும்படி ஆணையாளர் அவர்களின் உத்தரவின்பேரில் 4.1.2008 ல் பாததியார் வணிக வளாகம் D

மற்றும் F பிளாக் கடைகள் மற்றும் பிற இடங்களில் உள்ள கடைகளை காவல்துறை உதவியுடன் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் பூட்டி பொறுப்பு எடுக்கப்பட்டது. இக்கடைகளை மராமத்து மேற்கொண்டு பூட்டிய அனைத்து கடையும் மறு ஏலம் / டெண்டர் நடத்துவதற்கு மாமன்றத் தீர்மானம் எண். 838/ நாள் : 30.12.2009-ல் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் 24.2.2010-ல் ஏலம் / டெண்டர் நடத்தவும், ஏலம் போகாத இனங்களுக்கு 3.3.2010 அன்று ஏலம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. 24.2.2010 மற்றும் 25.2.2010 தேதிகளில் நடைபெற்ற ஏலம் / டெண்டரில் மொத்தமுள்ள 80 கடைகளில் 41 கடைகள் ஏலத்தில் எடுக்கப்பட்டன. ஏலம் போதாத 39 கடைகளுக்கு மீண்டும் 2.3.2010 மற்றும் 3.3.2010 தேதிகளில் மறுஏலம் / டெண்டர் நடத்தப்பட்டது. இதில் 15 கடைகள் ஏலத்தில் எடுக்கப்பட்டன. மீதமுள்ள 24 கடைகளுக்கு மூன்றாவது முறையாக ஏலம் / டெண்டர் 19.3.2010-ல் நடத்தப்பட்டது. இதில் 7 கடைகள் ஏலத்தில் எடுக்கப்பட்டன. ஏலம் / டெண்டர் போகாமல் மீதியுள்ள இனங்களின் விபரம் வருமாறு;

| வ. எண். | கடை விபரம் | கடை எண். | வைப்புத் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1 | **“D பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் | 31 | 2,00,000 | 7,000 |
| 2 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் | 5B | 1,00,000 | 3,000 |
| 3 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் | 6B | 1,00,000 | 3,000 |
| 4 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் | 7B | 1,00,000 | 3,000 |
| 5 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் | 8A | 1,00,000 | 3,500 |
| 6 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் | 8B | 1,00,000 | 3,000 |
| 7 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் | 11A | 1,00,000 | 3,500 |
| 8 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் (மாடி) | 58 | 50,000 | 1,500 |
| 9 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் (மாடி) | 60 | 1,50,000 | 5,000 |
| 10 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் (மாடி) | 61 | 1,00,000 | 2,000 |
| 11 | பாரதியார் நவீன சிறப்பங்காடி | 17 | 50,000 | 1,000 |
| 12 | பாரதியார் நவீன சிறப்பங்காடி | 18 | 50,000 | 1,000 |
| 13 | பாரதியார் நவீன சிறப்பங்காடி | 19 | 50,000 | 1,000 |
| 14 | பாரதியார் நவீன சிறப்பங்காடி | 21 | 50,000 | 1,000 |
| 15 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் (மாடி) | 57A | 50,000 | 2,000 |
| 16 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் (மாடி) | 57F | 50,000 | 2,000 |
| 17 | தமிழ்சங்கம் ரோடு தண்ணீர் தொட்டி கீழ்கடை | 4 | 2,50,000 | 7,000 |

மேற்கண்ட **17** கடைகளுக்கு மாநகராட்சி மாதவாடகை மதிப்பில் நான்காவது முறை ஏலம் / டெண்டர் நடத்தப்பட்டதில் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. டெண்டரில் D-31 கடைக்கு மட்டும் மாத வாடகை ரூ.3750/- என குறைத்து கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஏற்கனவே உள்ள மாத வாடகை மதிப்பின் அடிப்படையில் **5–**வது முறையாக ஏலம் / டெண்டர் 11.5.2010 நடத்தப்பட்டது. ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஆனால் கீழ்கண்ட மூன்று கடைகளும் சேர்த்து ஆக மொத்தம் நான்கு கடைகளுக்கு மாத வாடகை மற்றும் டெபாசிட் தொகை குறைத்து டெண்டர் வரப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை விபரம் / டெண்டர்தாரர் பெயர் | கடை எண். | மாநகராட்சி வாடகை மதிப்பு | மாநகராட்சி வைப்புத் தொகை | டெண்டரில் கேட்டுள்ள மாதவாடகை / வைப்புத் தொகை | மாநகாட்சி மதிப்பைவிட வாடகை / வைப்பு தொகை குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | **“D பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் / திரு. P.M. கருணாநிதி | 31 | 7000 | 2,00,000 | ரூ. 3750<br>2,00,000 | ரூ. 3250<br>(வாடகை மட்டும்) |
| 2 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் (மாடி) / திரு. S. நாகராஜ் | 57A | 2000 | 50,000 | ரூ. 1200<br>50,000 | ரூ. 800<br>(வாடகை மட்டும்) |
| 3 | **“F பிளாக்”** பாரதியார் வணிக வாளகம் (மாடி) / | 61 | 2000 | 1,00,000 | ரூ. 1200<br>50,000 | ரூ. 800<br>50,000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திரு. R. ராமநாதன் | | | | | |
| 4 | தமிழ்சங்கம் ரோடு தண்ணீர் தொட்டி கீழ்கடை / திரு. N. முருகன் | 4 | 7000 | 2,50,000 | ரூ. 3500 1,50,000 | ரூ. 3500 1,00,000 |

மேற்கண்ட நான்கு கடைகளுக்கு 4 முறை ஏலம் / டெண்டர் நடத்தியும், யாரும் ஏலம் / டெண்டரில் கலந்து கொள்ளவில்லை. தற்போது 5வது முறையாக ஏலம் / டெண்டர் நடத்தப்பட்டதில், ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. டெண்டரில் மட்டும் மாநகராட்சி மதிப்பை விட மாத வாடகை மற்றும் வைப்புத் தொகை குறைத்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட கடைகளுக்குரிய மாதவாடகை மற்றும் வைப்புத்தொகை குறைவாக உள்ளதை, மாநகராட்சியின் வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, டெண்டர்தாரர்களுக்கு கடையின் உரிமம் வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்புக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 921**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4) ம.வ.2/ 38798/2008**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய் தரும் இனங்களான மார்க்கெட்டுகள், நவீன கழிப்பிடங்கள், ஆடு மாடு வதை செய்யுமிடங்கள், கார் / வேன் மற்றும் சைக்கிள் ஸ்டாண்டுகள், சுற்றுலா வாகனங்கள் நிறுத்துமிடங்கள், அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலம் புல் பிளாட்டுகள் ஆகியவற்றிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு, அரசு ஆணையின்படி 2009-2010ம் ஆண்டில் ஏலத்தின் மூலம் கட்டணம் வசூலிப்பதற்கான உரிமம் வழங்கப்பட்ட இனங்களுக்கு 2010-2011ம் ஆண்டிற்கு முந்தைய ஆண்டு உரிமத் தொகையில் 5 விழுக்காடு குத்தகை தொகை உயர்வு செய்து உரிமம் நீட்டிப்பு வழங்கியும், 2009-2010ம் ஆண்டில் ஏலம் / டெண்டர் போகாத இனங்கள் இலாகா மூலம் வசூல் செய்யப்பட்டு வரும் இனங்கள் மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட இனங்களுக்கு மாநகராட்சி மதிப்பு நிர்ணயம் செய்து ஏலம் / டெண்டர் நடத்த மாமன்றத் தீர்மானம் எண். 860, நாள் : 22.1.2010-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாமன்றத் தீர்மானத்தின்படி, கீழ்கண்ட நாட்களில் டெண்டர் / ஏலம் நடத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| 25.3.2010 | - | முதல் ஏலம் / டெண்டர் |
| 31.3.2010 | - | இரண்டாவது மறுஏலம் / டெண்டர் |
| 13.4.2010 | - | மூன்றாவது மறுஏலம் / டெண்டர் |

மேற்கண்ட நாட்களில் ஏலம் / டெண்டர் முறையே மூன்று முறை நடத்தப்பட்டதில், ஏலம் / டெண்டர் எடுக்கப்பட்டது போக மீதமுள்ள **25** இனங்களுக்கு யாரும் டெண்டர் / ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. ஏற்கனவே மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பு அடிப்படையில் ஏலம் / டெண்டரில் யாரும் கேட்கவில்லை என்பதால், இவ்வினங்களுக்கு மாநகராட்சி மதிப்பு பரிசீலனை செய்து முடிவு செய்வது குறித்து மாமன்றத்தில் வைக்கப்பட்டதில், மாமன்றத்தில் இவ்வினங்களுக்கு மாநகராட்சி மதிப்பு நிர்ணயம் செய்து மாமன்றத் தீர்மானம் எண். 885 நாள் : 22.4.2010-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாமன்ற தீர்மானத்தின்படி, திருத்தி அமைக்கப்பட்ட மாநகராட்சி மதிப்பு அடிப்படையில் மறுஏலம் / டெண்டர் 13.5.2010, 26.5.2010 மற்றும் 8.6.2010-ம் தேதிகளில் நடத்தப்பட்டது. மறுஏலம் / டெண்டரை 10 மாத அடிப்படையில் நடத்தப்பட்டதில் டெண்டர் / ஏலம் கோரிய இனங்களின் மதிப்பு தொகை விபரப்பட்டியல் கீழே தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | இனம் | மாநகராட்சி மதிப்பு தொகை | மாமன்றம் திருத்திய மதிப்பு தொகை | மாநகராட்சி 10 மாத மதிப்பு தொகை | வருமான வரி மற்றும் சேவை வரி சேர்த்து மொத்த தொகை | ஏலம் / டெண்டர் கோரிய வர்கள் விபரம் | ஏலம் / டெண்டர் கோரிய மதிப்பு தொகை | குறைவு (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வடக்கு புறத்தில் அமைக்கப்பட்டுள்ள லாரி நிறுத்துமிடம் | 15,00,000 | 10,00,000 | 8,33,400 | 9,38,742 | C.சாத்தையா | 6,57,140 | 2,81,602 |
| 2 | அனுப்பானடி வாய்க்கால் (காமராஜர் சாலை) கட்டண கழிப்பறை | 1,00,000 | 75,000 | 62,500 | 70,400 | S.திருமுருகன் | 61,000 | 9,400 |
| 3 | தல்லாகுளம் பூஸ்டர் பம்பிங் ஸ்டேசன் கழிப்பிடம் | 2,11,285 | 1,75,000 | 1,45,833 | 1,64,267 | M. ராமநாதன் | 1,41800 | 22,467 |
| 4 | தாசில்தார் பள்ளிவாசல் தெரு கழிப்பிடம் | 2,74,605 | 150000 | 1,25,000 | 1,40,800 | M. கணேசன் | 1,21,000 | 19,800 |
| 5 | நேதாஜி ரோடு நேதாஜிசிலை அருகில் உள்ள கழிப்பிடம் | 2,41,575 | 1,80,000 | 1,50,000 | 1,68,960 | S. மோகன் | 1,20,000 | 48,960 |
| 6 | ஒருங்கிணைந்த பேருந்துநிலையம் பிளாட்பாரம் எண்.4ல் உள்ள ஆண்கள் கழிப்பிடம் | 4,58,590 | 3,50,000 | 2,91,667 | 3,28,533 | M. குமார் | 2,70,363 | 58,170 |
| 7 | கோச்சடையில் அமைக்கப்பட்டுள்ள லாரி நிறுத்துமிடம் | 15,00,000 | 8,00,000 | 6,66,667 | 7,50,933 | V.சரவணன் | 2,70,000 | 4,80,933 |

மேற்கண்ட 7 இனங்களுக்கு 13.5.2010, 26.5.2010 மற்றும் 8.6.2010ம் தேதிகளில் ஏலம் / டெண்டர் கோரியதில் மாநகராட்சி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட குறைவாக டெண்டர் கோரியுள்ளார்கள். இதுவரை **6** முறை ஏலம் / டெண்டர் கோரி யாரும் மாநகராட்சி மதிப்பு தொகைக்கு எடுக்க முன்வரவில்லை என்பதாலும், மாநகராட்சி வருவாய் இழப்பை கருத்தில் கொண்டும், மேற்கண்ட இனங்களுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று, டெண்டர்தாரர்களுக்கு அனுமதி உத்தரவு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்புக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 922**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) ம.வ.2/38798/2008**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய்தரும் இனங்களான மார்க்கெட்டுகள், நவீன கழிப்பிடங்கள், கார் / வேன் மற்றும் சைக்கிள் நிறுத்துமிடங்கள், லாரி நிறுத்துமிடங்கள் ஆகியவற்றிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2010-2011ம் ஆண்டுக்கு ஏலம் / டெண்டர் நடத்த மாமன்றத்தீர்மானம் எண். 860 நாள் : 22.1.2010-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாமன்றத் தீர்மானத்தின்படி ஏலம் / டெண்டர் நடத்தப்பட்டதில், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வடக்கு புறத்தில் அமைக்கப்பட்டுள்ள லாரி நிறுத்துமிடம் மற்றும் கோச்சடை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள லாரி நிறுத்துமிடங்கள் ஏலம் / டெண்டர் எடுக்கப்பட்டது. மேற்படி லாரி நிறுத்துமிடங்களுக்கு வரும் லாரிகள் மற்றும் கனரக வாகனங்களுக்கு நாள்

ஒன்றுக்கு, வாகனம் ஒன்றுக்கு கட்டணமாக ரூ.25/- நிர்ணயம் செய்து ஏலதாரர் மூலம் வசூல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்..923</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>6) ம.வ.2/ 19787 /09</u>**

மதுரை மாநகராட்சியின் மைய பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லும் பகுதிகயில் ஆம்னி பஸ்கள் மற்றும் கனரக வாகனங்கள் வந்து செல்வதால் மதுரை நகர் பகுதியில் போக்குவரத்து இடையூறு அதிகமாக ஏற்படுவதால், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, மதுரை மாநகராட்சியினால் மாட்டுத்தாவணியில் உள்ள ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் வடக்கு பக்கத்தில் உள்ள காலியிடமான 4.74 ஏக்கர் இடத்தில் மேடுபள்ளத்தை சரிசெய்து செம்மண் பரப்பி சரிசெய்ய மதிப்பீடு ரூபாய் ஒரு கோடிக்கு செலவு செய்து இடத்தை சீர் செய்யபபட்டுள்ளதின் முன்பகுதியில் 2 ஏக்கர் இடத்தில் ஆம்னி பஸ்கள் நிறுத்துமிடாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மதுரை ஆம்னி பஸ் & டிராவல்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தினரின் 26.2.2010ம் தேதிய மனுவில் மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் வடக்கு பக்கத்தில் உள்ள காலியிடத்தில் ஆம்னி பஸ் நிறுத்தம் செய்ய இடஒதுக்கீடு செய்து கொடுக்கவும், ஆம்னி பஸ் அசோசியேசன் அலுவலகத்திற்கு என அட்வான்ஸ் மற்றும் வாடகையின்றி 20'x20' அளவில் இடஒதுக்கீடு செய்து கொடுக்கும்படி கோரியுள்ளார். மேலும் ஆம்னி பஸ் மற்றும் டிராவல்ஸ் நிறுவனங்களின் அலுவலகப் பயன்பாட்டிற்கு மாநகராட்சியிலிருந்து கட்டிடம் கட்டுக் கொடுக்கவும் அல்லது தரை வாடகையாக கீழ்கண்ட விகிதப்படி இட ஒதுக்கீடு செய்து கொடுக்கும்படி கோரியுள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1) | 25'x20' அளவில் 500 சதுர அடிக்கு | – | 30 அலுவலகங்கள்<br>அட்வான்ஸ் ரூ.75,000/- |
| 2) | 20'x10' அளவில் 200 சதுர அடிக்கு | – | 15 அலுவலகங்கள்<br>அட்வான்ஸ் ரூ.50,000/- |
| 3) | 15'x10' அளவில் 150 சதுர அடிக்கு | – | 15 அலுவலகங்கள்<br>அட்வான்ஸ் ரூ.25,000/- |

மேற்படி இடத்திற்கு மாத தரை வாடகை சதுர அடி ஒன்றுக்கு ரூ.4.00 வீதம் நிர்ணயக்கவும் கோரியுள்ளனர்.

மதுரை மாநகராட்சியினால் மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் அருகில் வடக்கு பக்கத்தில் அமைக்கப்படவுள்ள ஆம்னி பஸ்கள் நிறுத்தும் இடத்தில் டிராவல்ஸ் நிறுவன அலுவலக உபயோகத்திற்காக மேற்படி இடத்திற்கு மாத தரை வாடகையாக சதுர அடி ஒன்றுக்கு ரூ.15.26 வீதம் 500 சதுர அடி இடத்திற்கு ரூ.7630/-ம் 200 சதுர அடி இடத்திற்கு ரூ.3050/-ம் 150 சதுர அடி இடத்திற்கு ரூ. 2290/- என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மதுரை ஆம்னி பஸ் டிராவல்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் 26.2.2010ம் தேதிய மனுவில் கோரியுள்ளபடி, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வடக்கு பக்கம் அமையவுள்ள ஆம்னி பஸ்கள் நிறுத்தும் இடமாக முன்பக்கம் 2 ஏக்கர் இடம் ஒதுக்கீடு செய்யவும், ஆம்னி பஸ் அலுவலகத்திற்கு மாத தரை வாடகையாக சதுர அடிக்கு ஒன்றுக்கு ரூ.15.26 என்றும், அட்வான்ஸ் தொகையாக 500 சதுர அடிக்கு ரூ.2 லட்சம், 200 சதுர அடிக்கு ரூ.1 லட்சம், 150 சதுர அடிக்கு ரூ.75,000/- என நிர்ணயம் செய்வது குறித்தும் மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்..924</u>**

**மீண்டும் பரிசீலித்து வைக்க வேண்டியது.**

**<u>7) ம.வ.2/19787 /09</u>**

மதுரை மாநகராட்சியின் பகுதியில் லாரிகள் / மினி லாரிகள் மற்றும் இதர கனரக வாகனங்கள் வந்து செல்வதால் மதுரை நகர் பகுதியில் போக்குவரத்து இடையூறு அதிகமாக ஏற்படுவதால், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டும், மதுரை மாநகராட்சியை சுற்றியுள்ள எல்லை பகுதியில் கீழ்கண்ட மூன்று இடங்களில் லாரிகள் நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

1) மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தின் வடக்கு பக்கத்தில் உள்ள இடம் (மொத்தம் 4.74 ஏக்கர்)
2) கோச்சடையில் லாரிகள் நிறுத்துமிடம்

3) அவனியாபுரத்தில் லாரிகள் நிறுத்துமிடம்

மேற்கண்ட லாரிகள் நிறுத்துமிடங்களில் லாரிகள் மூலம் ஏற்றி கொண்டு வந்த பொருட்களை இறக்கி மற்றும் ஏற்றி செல்வதற்கும், பார்சல் பொருட்கள் புக்கிங் செய்வதற்கும் ஏதுவாக சம்பந்தப்பட்ட லாரி உரிமையாளர்களுக்கு அலுவலகங்கள் அமைத்து கொடுக்குமாறு கோரிய மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

லாரி உரிமையாளர் சங்கத் தலைவரின் 24.3.2010ம் தேதி மனுவில், மாட்டுத்தாவணி பகுதியில் அமைக்கப்படவுள்ள லாரிகள் நிறுத்துமிடத்தில் 100 அலுவலகங்கள் அமைக்க தரை இடவாடகை வசதி செய்து கொடுக்கும்படியும், தரை வாடகையாக சதுர அடி ஒன்றுக்கு ரூ.2.50 வீதமும் 1000 சதுர அடி இடத்திற்கு அட்வான்ஸ் தொகை ரூ.25,000/-ம் 500 சதுர அடிக்கு அட்வான்ஸ் தொகையாக ரூ.10,000/- என நிர்ணயம் செய்யுமாறு கோரியுள்ளார்.

கோச்சடை பகுதியில் அமைக்கப்படவுள்ள லாரி நிறுத்துமிடத்தில் 100 அலுவலகங்கள் அமைக்க தரை இடவாடகை வசதி செய்து கொடுக்கும்படியும், தரை வாடகையாக சதுர அடி ஒன்றுக்கு ரூ.2.00 வீதமும் 1000 சதுர அடி இடத்திற்கு அட்வான்ஸ் தொகை ரூ.15,000/-ம் 500 சதுர அடிக்கு அட்வான்ஸ் தொகையாக ரூ.10,000/- என நிர்ணயம் செய்யுமாறு கோரியுள்ளார்.

மேலும் லாரிகள் நிறுத்துமிடங்களில் சாலை வசதி, பாதாள சாக்கடை வசதி, மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி, பொது கழிப்பறை வசதி மற்றும் காம்பவுண்ட் சுவர் அமைத்து கொடுக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியினால், மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ள லாரிகள் நிறுத்தும் இடத்தில் அலுவலக உபயோகமாக மேற்படி இடத்திற்கு தரை வாடகையாக 500 சதுர அடிக்கு மாத தரை வாடகை ரூ.7630/- எனவும் (சதுர அடி ஒன்றுக்கு ரூ.15.26) 1000 சதுர அடிக்கு மாத தரை வாடகையாக ரூ.15,260/- எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று கோச்சடையில் அமைக்கப்பட்டுள்ள லாரி நிறுத்தும் இடத்தில் அலுவலக உபயோகமாக மேற்படி இடத்திற்கு தரை வாடகையாக 500 சதுர அடிக்கு மாத தரை வாடகை ரூ.700/- எனவும், 1000 சதுர அடிக்கு மாத தரை வாடகை ரூ.1400/- எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, லாரி உரிமையாளர் சங்கத் தலைவரின் 23.4.2010ம் தேதிய மனு வாசிக்கப்பட்டு, மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள லாரிகள் நிறுத்துமிடத்தில் மொத்தம் 4.74 ஏக்கரில் முன்புறம் 2.00 ஏக்கரில் ஆம்னி பஸ் நிறுத்தம் செய்யும் இடம் நீங்கலாக மீதியுள்ள 2.74 ஏக்கரில் லாரிகள் நிறுத்துமிடம் அமையவுள்ள அலுவலகங்களுக்குரிய தரை இட வாடகை சதுர அடி ஒன்றுக்கு நிர்ணயம் செய்யவும், அட்வான்ஸ் தொகை நிர்ணயம் செய்யவும், கோச்சடை மற்றும் அவனியாபுரம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள லாரி நிறுத்துமிடத்தில் அமையவுள்ள அலுவலகத்திற்குரிய தரை இட வாடகை சதுர அடி ஒன்றுக்கு ரூ.15.26 என நிர்ணயம் செய்யவும், 1000 சதுர அடிக்கு தொகை ரூ.4 லட்சமும், 500 சதுர அடிக்கு ரூ.2 லட்சம் என அட்வான்ஸ் தொகை நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்..925**

**மீண்டும் பரிசீலித்து வைக்க வேண்டியது.**

**8) ந,பொ. 1/ 07519/ 10**

அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள். 12.05.1998ன் மதுரை மாநகராட்சிக்கு 27 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 9 இளநிலை பொறியாளர்கள் பணியிடங்களும் அரசாணை (நிலை) எண். 208, ந.நி (ம) கு.வ. (மா.ந. 2) துறை, நாள். 17.09.99ன் படி வைகை குடிநீர் பராமரிப்பு பணிக்கு 3 உதவிப் பொறியாளர் பணியிடங்களும், அரசாணை (2 டி) எண். 105, ந.நி. (ம) கு.வ. (ந.நி. 2) துறை, நாள். 26.06.07ன் படி 8 உதவிப் பொறியாளர்கள் பணியிடம் 38 எண்ணிக்கையிலும் இளநிலை பொறியாளர் பணியிடம் 9 எண்ணிக்கையும் ஆக மொத்தம் 47 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு 5 பணியிடங்கள் காலியாகவுள்ளது.

| வ. எண். | பணி வகை | அனுமதிக்கப்பட்ட உதவிப் பொறியாளர் பணியிடம் | தற்போது பணிபுரிபவர்கள் | காலியாக உள்ள பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | பொது பணியமைப்பு General Establishment | 27 | 24 | 3 |
| 2. | வைகை குடிநீர் திட்டம் | 3 | 2 | 1 |
| 3. | JnNURM திட்டம் | 8 | 7 | 1 |

இக்காலிப் பணியிடங்கள் மாநகராட்சி பணி விதிகள் 1996ன படி நேரடி நியமனத்தின் (By Direct Recruitment) மூலம் நிரப்பப்பட வேண்டியதாகும்.

தற்போது மதுரை மாநகராட்சியில் JnNURM திட்டத்தின் கீழ் உள்ள வரைவு அலுவலர் (Drafting Officers) பணியிடத்தில் பணிபுரிந்து வரும் கீழ்கண்ட பணியாளர்கள் பி.இ., (கட்டிடவியல்) பட்டப்படிப்பு படித்து தேர்ச்சி பெற்றுள்ளதால் மேற்கண்ட உதவிப் பொறியாளர் காலிப் பணியிடங்களில் பணி உயர்வு அடிப்படையில் தங்களை உதவிப் பொறியாளராக நியமனம் செய்யும் படி கோரியுள்ளார்கள்.

1) S. கருப்பையா
2) P. சோலைமலை
3) S. முத்துராமலிங்கம்
4) K. சரவணன்

மேற்கண்ட அலுவலர்கள் 29.11.06 முதல் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணி உயர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் JnNURM திட்டத்தின் கீழ் காலியாக இருந்து வரைவு அலுவலர் பணியிடங்களுக்கு 29.02.09 முதல் பணி உயர்வு செய்யப்பட்டு பணியேற்பாட்டின் கீழ் வார்டு பொறியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

காலியாகவுள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்கள் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடமாக இருந்தாலும் அரசாணை (பத்தாண்டு) எண். 416, ந.நி. (ம) கு.வ. (மா.ந.4) துறை, நாள். 15.09.99ல் காலியாகவுள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்கள் நிரப்புவது குறித்து தெரிவிக்கப்பட்ட அறிவுரையில் உதவிப் பொறியாளர் / தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளில் முறையான காலிப் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்யப்படும் போது பொறியியல் பட்டம் / பட்டயம் பெற்று கீழ்நிலை பதவிகளில் பணியாற்றுபவர்களை நியமனம் செய்ய பரிசீலிக்கலாம் என்று மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையிலும் ஷ வரைவு அலுவலர்கள் வார்டு பொறியாளர்களாக பணியேற்பாட்டின் கீழ் பணியாற்றி வருவதால் பணியிடத்தின் அனுபவத் தன்மை வாய்ந்தவர்கள் என்பதை கருத்தில் கொண்டும் 1) திரு.S. கருப்பையா 2) திரு.P. சோலைமலை 3) திரு.S. முத்துராமலிங்கம் 4) திரு.K. சரவணன் ஆகிய வரைவு அலுவலர்களை அரசின் உறுதியாக்கம் பெற வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கும், அதற்கான ஊதிய விகிதத்தை அமுல்படுத்துவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.. 926</u>**

**அரசின் உறுதியாக்கம் பெற வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

## 9) ம.வ.3/28381/2009

மதுரை மாநகராட்சியின் மத்திய காய்கறி அங்காடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அருகில் அமைந்துள்ளதால், போக்குவரத்து இடையூறு மற்றும் சுகாதாரக்கேடு தவிர்க்கும்பொருட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியை இடித்து பல அடுக்குமாடி வாகன இருப்பிடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியில் உள்ள கடைகளை, மதுரை மேலூர் ரோடு மாட்டுத்தாவணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காய்கறி அங்காடிக்கு மாற்றம் செய்யவும், வாடகை மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்தும், மாமன்றத்தில் தீர்மான எண். 891 நாள் : **22.4.2010–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

மாட்டுத்தாவணி புதிய மத்திய காய்கறி அங்காடியில் 8x8 அளவு தரைக்கடைகள் 740-ம், 10x10 அளவு காலியிடம் தரைக்கடைகள் 57 மற்றும் 20x20 அளவு காலியிடம் தரைக்கடைகள் 70 கட்டப்பட்டுள்ளது. ஷை கடைகளில் பழைய மத்திய காய்கறி அங்காடியில் கடை வைத்துள்ளவர்களை இடமாற்றம் செய்யப்படவுள்ளது. மாட்டுத்தாவணியில் உள்ள மீதி இடத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படுவதை சுகாதார கேடு விளைவிப்பதைத் தவிர்க்கும் பொருட்டும், தற்போது அமைக்கப்பட்டுள்ள தரைக்கடைகள் 740 போதுமானதாக இல்லை என்பதால், தரை கடைகளை சுற்றியுள்ள பகுதியில் ஆக்கிரமிப்பு மற்றும் சுகாதாரக்கேடு ஏற்படுவதை தவிற்கும் பொருட்டு **(8 X 8) 64** சதுரடியில் **22,400** சதுரடி காலியிடத்தில் தரைகடைகள் அமைக்கவும் ஏற்கனவே மாமன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, மாத வாடகை ரூ.700/- எனவும், வைப்புத் தொகை ரூ.50,000/- எனவும் நிர்ணயம் செய்யவும்,

மதுரை சென்ட்ரல் மார்க்கெட் உருளைக்கிழங்கு மொத்த வியாபாரிகள் நலச்சங்கத்தினரின் மனுவில் 25 உறுப்பினர்கள் மார்க்கெட்டில் உருளைகிழங்கு வியாபாரம் செய்து வருவதாகவும், தற்போது சென்ட்ரல் மார்க்கெட் மாட்டுத்தாவணிக்கு மாறஇருப்பதால், மாட்டுத்தாவணியில் புதியதாக அமைக்கப்படும் இடத்தில் தரைக்கடை கோரியுள்ள மனு வாசிக்கப்பட்டு, மாட்டுத்தாவணியில் ஏற்கனவே தரைகடைகளுக்கு வழங்கப்படும் இடத்தில் காலியிடமாக 10,000 சதுர அடியில் 400 சதுர அடி கணக்கில் காலியிட தரைக்கடைகள் அமைக்கவும், ஏற்கனவே மாமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, மாத வாடகைக் கட்டணம் ரூ.4000 எனவும், வைப்புத் தொகை ரூ.2,00,000 என நிர்ணயம் செய்யவும் ஷை கடைகள் ஏலம் / டெண்டர் விடவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்..927**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது,**

**10) ம.வ.3/28381/2009**

மதுரை மாநகராட்சியின் மத்திய காய்கறி அங்காடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அருகில் அமைந்துள்ளதால், போக்குவரத்து இடையூறு மற்றும் சுகாதாரக்கேடு தவிர்க்கும்பொருட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியை இடித்து பல அடுக்குமாடி வாகன இருப்பிடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியில் உள்ள கடைகளை, மதுரை மேலூர் ரோடு மாட்டுத்தாவணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காய்கறி அங்காடிக்கு மாற்றம் செய்யவும், வாடகை மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்தும், மாமன்றத்தில் தீர்மான எண். 891 நாள் : **22.4.2010—ல்** தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாட்டுத்தாவணியில் கட்டப்பட்டுள்ள புதிய மத்திய காய்கறி அங்காடியில் 8x8 அளவு 240 கட்டிடக்கடைகளும், 13'.6" x 13'.6" அளவில் 284 கட்டிடக் கடைகளும் கட்டப்பட்டுள்ளது. ஷை கடைகளில் பழைய மத்திய காய்கறி அங்காடியில் ஏற்கனவே கடை நடத்திவரும் வியாபாரிகளுக்கு இடமாற்றம் செய்து கொடுக்கப்படவுள்ளது. மேற்கண்ட இடத்தில் கட்டிட கடைகள் கட்டியுள்ளது பகுதி நீங்கலாக, மீதியுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு மற்றும் சுகாதாரக்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், சுற்றியிள்ள**5000**சதுர அடி இடத்தில் **182.25** சதுர அடி அளவில் கட்டிடக் கடைகள் கட்டவும், ஷை கடைகளுக்கு ஏற்கனவே மாமன்றத் தீர்மானத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, மாத வாடகை ரூ.2000/- எனவும், வைப்புத் தொகை ரூ.1,00,000/- எனவும் நிர்ணயம் செய்யவும், கடைகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்..928**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) ம.வ.3/ 28381 /2010**

மதுரை மாநகராட்சியின் மத்திய காய்கறி அங்காடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அருகில் அமைந்துள்ளதால், போக்குவரத்து இடையூறு மற்றும் சுகாதாரக்கேடு தவிர்க்கும்பொருட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியை இடித்து பல அடுக்குமாடி வாகன இருப்பிடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியில் உள்ள கடைகளை, மதுரை மேலூர் ரோடு மாட்டுத்தாவணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காய்கறி அங்காடிக்கு மாற்றம் செய்யவும், வாடகை மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்தும், ஏற்கனவே பழைய சென்ட்ரல் மார்க்கெட்டில் கடை வைத்து நடத்திவருவதாக தெரிவித்துள்ள **13** சங்கங்களைச் சார்ந்த 1235 கடை உறுப்பினர்களின் கடைகளை ஆய்வு செய்து, மெய்த்தன்மை அறிந்து மெய்த்தன்மையின் அடிப்படையல் ஏலம் மூலம் கடைகள் ஒதுக்கீடு செய்யவும், மாமன்றத்தில் தீர்மான எண். 891 நாள்:**22.4.2010—ல்** தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கம் நாளங்காடி மேட்டுப்பகுதி சீமை காய்கறி மற்றும் தக்காளி மொத்த வியாபாரிகள் நலச்சங்கத்தினரின் 13.5.2010ம் தேதிய கடிதத்தில், சென்ட்ரல் மார்க்கெட் மேட்டுப்பகுதியில் காய்கறி வியாபாரம் செய்து வருவதாகவும், மாநகராட்சியில் நிர்ணயம் செய்யப்படும் குத்தகைதாரருக்கு தினசரி கட்டணம் செலுத்தி வருவதாகவும், 96 உறுப்பினர்களைக் கொண்ட தங்கள் சங்க உறுப்பினர்கள் மேட்டுபகுதியில் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வருவதாலும், நெரிசல் அதிகமாக உள்ள இடமாக இருப்பதாலும், தற்போது புதியதாக கட்டப்பட்டுள்ள புதிய காய்கறி அங்காடியில் மாநகராட்சியே நேரிடையாக தங்கள் சங்க உறுப்பினர்களுக்கு மாதவாடகைக்கு கடையை வழங்கவும், தங்களுக்கு மாட்டுத்தாவணி புதிய காய்கறி அங்காடியில் கடைகள் மாநகராட்சியே நேரிடையாக ஒதுக்கீடு செய்து கொடுக்குமாறு கோரியுள்ளனர்.

96 உறுப்பினர்களைக் கொண்ட ஷை சங்கத்தையும், ஏற்கனவே மாமன்றத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள **13** சங்கத்தினருடன் சேர்த்து தற்போது **96** உறுப்பினர்களை கொண்ட ஷை சங்கத்தையும் சேர்த்து கடைகளை ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்றதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்..929**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12) ம.வ.3/28381/2009**

மதுரை மாநகராட்சியின் பழைய மத்திய காய்கறி அங்காடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அருகில் அமைந்துள்ளதால், போக்குவரத்து இடையூறு மற்றும் சுகாதாரக்கேடு தவிர்க்கும்பொருட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியை இடித்து பல அடுக்குமாடி வாகன இருப்பிடம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டு, ஷை மத்திய காய்கறி அங்காடியில் உள்ள கடைகளை, மதுரை மேலூர் ரோடு மாட்டுத்தாவணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள காய்கறி அங்காடிக்கு மாற்றம் செய்யவும், வாடகை மற்றும் வைப்புத் தொகை நிர்ணயம் செய்தும், மாமன்றத்தில் தீர்மான எண். 891 நாள் : 22.4.2010–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மதுரை மத்திய காய்கறி அங்காடியில் முருங்கைகாய் வியாபாரி சங்கத்தினர் வியாபாரம் செய்து வருவதால், தற்போது அமைக்கப்பட்டுள்ள மாட்டுத்தாவணி மத்திய காய்கறி அங்காடியில் உள்ள காலியிடத்தில் 8000 சதுர அடி இடத்தில் 400 சதுர அடி அளவில் காலியிட தரைக்கடைகள் அமைக்கவும், ஏற்கனவே மாமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, மாதவாடகைக் கட்டணம் ரூ.4000 எனவும் வைப்புத் தொகை ரூ.2,00,000 என நிர்ணயம் செய்யவும், ஷை காலியிடத்தை ஏலம் / டெண்டர் மூலம் ஒப்படைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண்..930</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் தற்போது கூடுதலாக பெறப்பட்ட அறிஞர் அண்ணா மத்தியகாய்கறி அங்காடி சங்கத்தினர் மத்திய காய்கறி அங்காடியில் மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு காய்கறி சிப்பங்களை இறக்கி வைத்து வியாபாரம் செய்ய 5000 சதுர அடி ஒதுக்கீடு செய்ய கோரியதன் அடிப்படையில், 5000 சதுர அடி காலியிடத்தை ஏற்கனவே 22.4.2010–ம்தேதி ஒப்புதல் செய்யப்பட்ட மாமன்றத் தீர்மானத்தின்படி, மாத வாடகை ரூ.30,000 எனவும், டெபாசிட் தொகையாக ரூ.7 லட்சம் எனவும் நிர்ணயம் செய்து ஏலம்விடவும் மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**13) ம.வ.3/28381/2009**

மதுரை மாநகராட்சி பழைய காய்கறி அங்காடியிலுள்ள கட்டிட கடைகளை மாற்று இடமாக புதியதாக கட்டப்பட்டுள்ள மத்திய காய்கறி அங்காடியில் உள்ள கட்டிட கடைகளுக்கு மாற்றம் செய்தது போக மீதமுள்ள 8x8 அளவில் 20 கடைகள், 13.6"x13.6" அளவில் **42** கடைகள் மொத்தம் 62 கடைகள் மாமன்றத் தீர்மானம் எண் 891/நாள்:22.04.2010ந் தேதிய தீர்மானத்தின்படி 10.6.2010ம் தேதியில் ஏலம்/டெண்டர் நடத்தப்பட்டது. ஏலம்/ டெண்டர் நடைபெற்றுள்ளதில் மொத்தம் உள்ள 62 கடைகளில் 13.6"x13.6" அளவில் 42 கடைகளும் 8x8 அளவில் 9 கடைகளும் டெண்டர் வரப்பெற்றது. ஏலம்/டெண்டர் போகாதா 8x8 அளவில் உள்ள 11 கடைகள் ஏலம்/ டெண்டர் நடத்தப்படும் என்றும், ஏலம்/டெண்டர் வரப்பெற்ற இனங்களில் 51 கடைகளுக்குரிய பட்டியலில் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகையைவிட கூடுதலாக கேள்வித் தொகை கோரியுள்ள இனங்களை உறுதி செய்து மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : ஏலம்/டெண்டர் வரப்பெற்ற இனங்களுக்குரிய விபரப் பட்டியல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது

<u>மாமன்ற தீர்மானம் எண்..931</u>

<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>

**(ஒம்.) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 25.06.2010.**
**மதுரை.**

* * * * * * * *

**<u>மேயர் அவர்களின் இரங்கல் தீர்மானம்</u>**

1) முன்னாள் மேதகு துணை ஜனாதிபதி திரு. பைரோன் சிங் ஷெகாவத் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு இம்மாமன்றம் கவலை கொள்கிறது. இவரது மறைவு இந்திய நாட்டிற்கு பேரிழப்பாகும். இவரது பிரிவால் துயறுரும் இவரது குடும்பத்தினருக்கு என் சார்பிலும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்ற தீர்மானம் எண்..932</u>**

---

(2) தமிழக சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் கடந்த 26.6.2010–ம் தேதி இறந்த செய்தி கேட்டு இம்மாமன்றம் கவலை கொள்கிறது. இவரது பிரிவால் துயறுரும் இவரது குடும்பத்தினருக்கு என் சார்பிலும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்ற தீர்மானம் எண்..933</u>**

(3) மதுரை மாநகராட்சி வார்டு எண்.45–ல் மாமன்ற உறுப்பினராக இருந்த திரு. இரா. கணேசன் அவர்கள் கடந்த 2.6.2010ம் தேதி இறந்த செய்தி கேட்டு இம்மாமன்றம் கவலை கொள்கிறது. இவரது பிரிவால் துயறுரும் இவரது குடும்பத்தினருக்கு என் சார்பிலும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்ற தீர்மானம் எண். 934</u>**

(4) மதுரை மாநகராட்சியில் 2001 முதல் 2006 வரை 10–வது வார்டு மாமன்ற உறுப்பினராக இருந்து வந்த திரு. பி.சி. தங்கம் அவர்கள் 26.5.2010–ம் தேதி மறைந்த செய்தி கேட்டு இம்மாமன்றம் கவலை கொள்கிறது. இவரது பிரிவால் துயறுரும் இவரது குடும்பத்தினருக்கு என் சார்பிலும் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் இம்மாமன்றம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்ற தீர்மானம் எண்..935</u>**

## மேயர் அவர்களின் தீர்மானம்

கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்த மொழி தமிழ். உலகில் உள்ள மொழிகளில் சீர் இளமை குன்றாமல் அனைத்துத் துறைகளிலும் ஒளியூட்டி வழிகாட்டும் மொழியாக நம் செந்தமிழ் மொழி அமைந்துள்ளதை உலகோர் போற்றுவர்.

வாழும் தமிழுக்கு உயர்தனி தமிழ் செம்மொழி அங்கீகாரத்தை பேற்றுத் தந்தவர் வாழும் தமிழினத் தலைவர், தமிழ் முதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தேன்மதுர தமிழோசை உலகம் எல்லாம் பரவும் வகையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை கோவையில் நடத்தி தமிழுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை சிறப்புடன் நடத்தி உலகத் தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் கோவையில் ஒன்றுகூடச் செய்து சிறப்புடன் மாநாட்டை நடத்திய நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மதுரை மக்கள் சார்பாகவும், மதுரை மாநகராட்சி மாமன்றம் சார்பாகவும் பாராட்டும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க உயர்தனி செம்மொழி
வளர்க முத்தமிழ் அறிஞர் தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்களின் தமிழ் பணி.

**மாமன்ற தீர்மானம் எண். 936**

# <u>மாமன்றக்கூட்ட குறிப்பு</u>
# <u>பொருள்</u>
# <u>Table Agenda</u>

**<u>1) சி.டபிள்யு.3/ 2156 /2010</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்—1 விதி 19(2)—ன்படி 13.04.2010-ம் தேதி நடைபெற்ற சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு</u>** : சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .937</u>**
**பதிவு செய்யப்பட்டது.**

**<u>2) சி.டபிள்யு.3/16627/2009</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்—1 விதி 19(2)ன்படி 16.04.2010-ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு :</u>** வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.938</u>**
**பதிவு செய்யப்பட்டது.**

**<u>3) சி.டபிள்யு.1/36230/2009</u>**

மதுரை மாநகராட்சி 54-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜே.டி.அமுதா கடந்த 25.02.2010, 24.03.2010 மற்றும் 22.04.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 60-ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குட்பட்டு ஷை சட்டம் பிரிவு 57(1) (கே)—ன்படி ஒரு மாமன்ற உறுப்பினர் கடைசியாக கலந்து கொண்ட கூட்டத்திலிருந்தோ அல்லது பதவியேற்றத்தில் இருந்தோ தொடர்ந்து மூன்று மாதங்கள் கலந்து கொள்ளாமல் இருப்பாராயின், அவர் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழந்தவராக கருதப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4)-ல் கண்டுள்ளவாறு இவ்வாறு தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளாத நிலையில் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழப்பதை மாமன்றத்திற்கு தெரிவித்து, மாமன்றத்தின் முடிவைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு :</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4)ல் ஆணையாளர் அறிக்கை அளித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதன் பேரில் மாமன்றம் அவ்வாறான ஒருவர் மீது மீண்டும் மாமன்ற உறுப்பினராக அமர்த்தி தீர்மானிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண்.939</u>**

**இந்த மாமன்ற உறுப்பினர் உடல்நலம் சரியில்லாமல் இருப்பதாகதெரிவித்திருப்பதால், இம்மாமன்றம் Condone செய்து இவரை தகுதி இழப்பிலிருந்து விலக்களித்து, இவர் மாமன்ற உறுப்பினராக தொடர்ந்து நீடிக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**4) ம.ந.2/9156/07**

இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் அரசு ஆணை எண்.198(ந.நி.(ம) கு.நி.வ.துறை) நாள்:24.10.2007 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கடிதம் எண் 56316/97/MCA-1 நாள் :16.1.99ன்படி 2700 நிரந்தர துப்புரவு ஊழியர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பணியிடங்களில் தற்போது (31.5.2010 நிலவரப்படி) 1855 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், 621 தற்காலிக தினக்கூலி ஊழியர்களும் பணிசெய்து வருகின்றார்கள். மேற்படி பணியிடங்களில் 224 நிரந்தர துப்புரவு பணியிடங்கள் (வடக்கு மண்டலம்– 24,கிழக்கு மண்டலம் – 91, மேற்குமண்டலம்– 46, தெற்கு மண்டலம் –63) காலியாக உள்ளது.

மேற்படி பணியிடங்கள் (224) காலியாக உள்ளதால், மாநகராட்சியின் துப்புரவுபணியில் தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. எனவே மாநகராட்சி துப்புரவு பணியை மேம்படுத்தவும், பொது சுகாதார நலன் கருதியும், மேற்படி காலியாக உள்ள 224 துப்புரவு பணியிடங்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வதற்கு உரிய டெண்டர் கோருவதற்கும், அதற்கென ஓர் ஆண்டுக்கு ஆகும் உத்தேச செலவு தொகை சுமார் ரூ.98.50 லட்சங்கள் மாநகராட்சி பொது நிதியில் இருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண். 940**</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) B30/24294/09**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 72 வார்டுகளிலும் டிப்பர் லாரிகள் மூலம் குப்பைகள் அள்ளும் பணிகளுக்காக கனரக வாகனங்கள் ஓட்டுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் வாகன ஓட்டுநர்கள் அரசு நிர்ணயித்த ஊதிய விகிதத்தில் நியமித்துக் கொள்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இரண்டாம் முறையாக கடந்த 09.06.10 கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) திரு.K.R.லிங்கதுரை விலை விகிதம் - மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 9.82% அதிகம்,
2) M/s.P.R.K. Associates - மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பீட்டுப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில், L 1 ஒப்பந்தக்காரர் M/s. P.R.K. Associates நிறுவனத்தினர் 2009-10ம் ஆண்டு மதிப்பீட்டு விலை விகுதத்தை விட 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஏற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண். 941**</u>

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6) மவ 4/39773/08**

மதுரை மாநகராட்சி – மைய வருவாய் பிரிவு மாண்பு மிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் BSNL நிறுவனத்தின் கடிதத்தின் அடிப்படையில் வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு 4' * 4' அளவில் பொது தொலைபேசி அமைத்துக் கொள்ள மாமன்றத்தின் முடிவினைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண் | கோப்பு எண் | பெயர் | தொலைப்பேசி அமைத்துக் கொள்ளக் கோரிய இடம் |
|---|---|---|---|
| 1 | மவ 4/39773/08 | J.லிங்கராஜ் | அண்ணாபேருந்து நிலையம் பனகல் சாலை |
| 2 | மவ 4/39775/08 | R.தமிழரசன் | அண்ணாபேருந்து நிலையம் பனகல் சாலை |
| 3 | மவ 4/39776/08 | P.சந்திரசேகரன் | தமிழ்சங்கம் சாலை லேபர் ஸ்கூல் முன்பு |
| 4 | மவ 4/39777/08 | R.மலர்விழி | தமிழ்சங்கம் சாலை லேபர் ஸ்கூல் எதிர்புறம் |
| 5 | மவ 4/39778/08 | P.ஜெயக்குமார் | தமிழ்சங்கம் சாலை லேபர் ஸ்கூல் முன்பு |
| 6 | மவ 4/43046/08 | S.ஆறுமுகம் | கூடல் நகர் மெயின் ரோட்டில் ஆலமரம் பஸ்ஸ்டாப் அருகில். |
| 7 | மவ 4/3413/09 | M.கண்ணன் | தமிழ்சங்கம் சாலை லேபர் ஸ்கூல் முன்பு |
| 8 | மவ 4/15214/10 | R.அன்பரசி | அரசு இராஜாஜி மருத்துவமனை அவசரப்பிரிவிற்கு செல்லும் வழியில் மேற்புறம். |
| 9 | மவ 4/39774/08 | K.S.முத்து | அரசு இராஜாஜி குடும்ப நல மருத்துவமனை அருகில் பனகல் சாலை பிளாட்பாரத்தில் நுழைவு வாயில் கிழக்கு பக்கம். |

<u>**மாமன்ற தீர்மானம் எண்.942**</u>

**மாற்றுத்திறனாளிகளுக்கு பொதுத்தொலைபேசி அமைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**7) மதி1/3745/2009**

மதுரை மாநகராட்சி வார்டு எண் **65** மாடக்குளம் கிராமம் புல எண்421/2 . 423/1ல் கட்டுப்பட்ட மனை எண் **7** திரு.சீத்தாராமன் என்பவருக்கு சொந்தமான நிலத்தில் மாநகராட்சி பாதாள சாக்கடை பைப்லைன் பதிக்கப்பட்டதற்கு மாற்று இடம் வழங்குமாறு திரு.சீத்தாராமன் என்பவர் கோரியிருந்ததன்பேரில் இம்மாநகராட்சி தனது மாமன்ற தீர்மானம் எண் 737/16.7.09-ல் பாதாளச்சாக்கடை பைப்லைன் பதித்த இடத்தினை இனாம் சாசனம் மூலம் பெற்றுக் கொண்டு அதற்கு பதில் சர்வே வார்டு 5A சர்வே எண் 117-ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் 1673 ச.அடி நிலத்தினை மாற்று இடமாக வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றி உரிய ஆணை வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பபட்டதில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 39192/2009 மாநஅ3 நாள்:07.12.2009**–**ல் மாற்று இடம் வழங்குவதற்கு பதிலாக நட்ட ஈட்டு தொகை வழங்கலாமா என கோரியதின் பேரில் மனுதாரரிடம் நட்டஈட்டு தொகை பெற்று கொள்ள சம்மத கடிதம் கோரப்பட்டதில் மனுதாரர் மாமன்ற தீர்மானத்தின்படி மாற்று இடம் வழங்குமாறு தெரிவித்தார்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்39192/2009, மாந.அ3 நாள்:17.03.2010ல் மனுதாரருக்கு மாற்று இடமாக வழங்க உத்தேசித்துள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடமாக உள்ளதால் வேறொரு இடம் தேர்வு செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில் வேறு இடம் ஆய்வு செய்யப்பட்டு சர்வே வார்டு 1, பிளாக் எண் 8, சர்வே எண்19ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திரு.சீத்தாராமன் என்பவருக்கு மாற்று இடம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இடம் சர்வே ஆவணங்களில் தண்ணீர் தொட்டி என உள்ளது. இடத்தில் தற்போது பயன்படுத்த இயலாத பயனற்ற நிலையில் ஒரு சிறிய கட்டிடமும், ஒரு மோட்டார் ஸ்விட்ச் அறையும் ஒரு ஆழ்துளைக் கிணறு மட்டும் உள்ளது. மீதமுள்ள இடம் காலியிடமாக உள்ளது. ஆகவே, மனுதாருக்கு மாற்று இடமாக இந்த இடத்தில் வடமேற்கு மூலையில் 155 ச.மீ இடத்தை நகராட்சி நிர்வாக இயக்குநரின் உத்தரவை பெற்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண். 943**

**நகரமைப்புக் குழு ஆய்வு செய்து முடிவு செய்ய தீர்மானிக்கிறது.**

**8) மதி.1/19523/2010**

மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம் கிராமம், புல எண் 134/2A1ல் உள்ள புதுக்குளம் கண்மாய் புறம்புகளில் மதுரை செய்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் 25 நபர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்க கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசாணை (நிலை) எண் 369, வருவாய்த் (நி.மு.**1(2)**) துறை நாள்:24.6.2008ல் உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாநகராட்சியின் தீர்மானம் பெற்றுத்தரக்கேட்டு மதுரை செய்தியாளர் சங்க செயலரிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றுள்ளதாகவும் மேற்படி புலம் மாநகராட்சியின் எல்கைக்குள் உள்ளதால் மேற்கண்ட 25 நபர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்குவது தொடர்பான மதுரை மாநகராட்சியின் ஆட்சேபணையின்மையை தீர்மான வடிவில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்(பொ) கடிதம் ந.க.எண்.ஜே4/72822/03, நாள்:22.06.10 வாசிக்கப்பட்டு.

மேற்படி இடம் நில அளவை ஆவணங்களில் சர்வே வார்டு XVI, பிளாக் எண் 36, TS.No.87 மற்றும் 88ல் கட்டுப்பட்ட சர்க்கார்புறம்புகள் புதுக்குளம் கண்மாய் என பதிவு உள்ளது. மேற்படி இடத்தில் மதுரை செய்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் 25 நபர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு இம்மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையில்லையென தெரிவிக்கலாமா என்பது குறித்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் 945**

**ஆட்சேபனையில்லை எனத் தெரிவிக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**9) மதி1/19387/2010**

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் தல்லாகுளம் கிராமம் புல எண் 268(நகர அளவை எண் 5, வார்டு எண் 16, பிளாக் எண் 4)ல் விஸ்தீரணம் 3.10ஏக்கர் தீர்வை

ஏற்பட்ட சர்க்கார் நஞ்சை தரிசு நிலம் மதுரை பத்திரிக்கையாளர் சங்கத்தின் 80 உறுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட புலம் மதுரை மாநகராட்சி எல்கைக்குள் உள்ளதால் இவ்வினம் தொடர்பாக மதுரை மாநகராட்சியின் ஆட்சேபணையின்மைச் சான்றினை தீர்மான வடிவில் அனுப்பி வைக்குமாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் ஜே4/45349/10, நாள்:17.06.2010 வாசிக்கப்பட்டு.

மேற்படி நிலம் மாநகராட்சி நில அளவை ஆவணங்களில் சர்வே வார்டு எண் XVI, பிளாக் எண் 4ல் கட்டுப்பட்ட சர்க்கார் தீர்வை ஏற்பட்ட தரிசு (நஞ்சை) என பதிவு உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் மதுரை பத்திரிக்கையாளர் சங்கத்தினைச் சார்ந்த 80 உறுப்பினர்களுக்கு வீட்டடி மனை ஒதுக்கீடு செய்ய மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .946</u>

**ஆட்சேபணையில்லை எனத் தெரிவிக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**(ஒம்.) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**நாள் : 29.06.2010.**
**மதுரை.**

* * * * * * * *